**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், தை மாதம் 13 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண்.11/2026**

**in**

**அசல் வழக்கு எண். 192/2017**

1. சின்னக்குட்டி (இறந்துவிட்டார்)
2. செல்லம்மாள்
3. மனோஜ் ... **மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்**

**// எதிர்//**

1. மருத குட்டி
2. ராமாத்தாள்
3. பழனியம்மாள் ... **எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 வாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.கோபாலகிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.முத்துக்குமார், அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 3(A) r/w பிரிவு 151 ன் கீழ் மனுவில் கூறியுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து ஆவணங்களை பெறுதல் கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1). மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

1.1). வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். ஆரம்பத்தில் 1ம் வாதியால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது, அந்த நேரத்தில் ஆவண எண்.1 ஐ தாக்கல் செய்யவில்லை. அதன் பிறகு 3ம் மனுதாரரும் அவரது தாயாரும் வழக்கில் ஒரு கட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இப்போது 3ம் மனுதாரர் மேற்கூறிய ஆவணத்தைக் கண்டுபிடித்து சான்றளிக்கப்பட்ட நகலாக ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றத்தில் அவற்றை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை. மனுதாரர்கள் கவனக்குறைவாகவோ அல்லது பொறுப்பற்ற விதத்திலோ நடந்துகொள்ளவில்லை. அசல் வழக்கை நியாயமாகத் தீர்ப்பதற்கு இந்த ஆவணங்கள் மிகவும் அவசியமானவை. எனவே, மனுவில் கூறியுள்ள ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதும், அவற்றைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதத்தை மன்னிப்பதும் அவசியமாகிறது. ஆவணங்களைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதம் மன்னிக்கப்படாவிட்டால், மனுதாரர்களுக்கு ஈடுசெய்ய முடியாத பாதிப்பு மற்றும் இழப்பு ஏற்படும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :-**

2.1). மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்/3-ம் பிரதிவாதி மேற்படி அசல் வழக்கின் பிரதிவாதி தரப்பு விசாரணையின் பொருட்டு இரண்டு ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்றும் மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் ஏற்பட்ட காலதாமதத்தை நீக்கறவு செய்ய வேண்டும் என்று கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆவணத்தை தாக்கல் செய்யாமல் விட்டதற்கான சட்டப்படியான காரணம் எதுவும்

தனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை.

2.2). மேற்கண்ட ஆவணங்களை தற்பொழுது தான் கண்டறிந்ததாகவும் 3ம் மனுதாரரின் கவனக்குறைவாலும், அசட்டையாலும் தற்பொழுது மனுவை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல. மேற்கண்ட ஆவணங்கள் வழக்கினை தீர்வு செய்வதற்கு அவசியமானது என்றும், எனவே மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை "பிழை பொறுத்தல்" செய்து ஆவணத்தைப் பெற்றுக்கொண்டு குறியீடு செய்வதற்கு உத்தரவு வழங்கும் படியும் கேட்கப்பட்டுள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும் 3ம் மனுதாரர்/ 3-ம் பிரதிவாதி என்ன காரணத்திற்காக மனு ஆவணம் 1-ஐ குறியீடு செய்ய வேண்டுகிறார் என்பது குறித்து எவ்வித சரத்துக்களும், சங்கதிகளும் மனுவில் இடம்பெறவில்லை. மனு ஆவணம்-1ற்கும் வழக்கு சொத்திற்கும் என்ன தொடர்பு என்பது குறித்து தெரிவிக்கவில்லை. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. தீர்வு :-</u>**

**5.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, பி.சா.1 விசாரணை தொடர்ச்சிக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

5.1). மனுதார்கள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரால், 3ம் மனுதாரர்/பிரதிவாதியின் தந்தை 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது, அந்த நேரத்தில் ஆவண எண்.1 ஐ தாக்கல் செய்யவில்லை. அதன் பிறகு 3ம் மனுதாரரும் அவரது தாயாரும் வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள். நீதிமன்றத்தில் அவற்றை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை. அசல் வழக்கை நியாயமாகத் தீர்ப்பதற்கு இந்த ஆவணங்கள் மிகவும் அவசியமானவை என சொல்லப்பட்டுள்ளது.

5.2). எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள 1-வது ஆவணத்தை தாக்கல் செய்யாமல் விட்டதற்கான சட்டப்படியான காரணம் எதுவும் தனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை. மேலும் என்ன காரணத்திற்காக மனு ஆவணம் 1-ஐ குறியீடு செய்ய வேண்டுகிறார் என்பது குறித்தும், மனு ஆவணம்-1ற்கும் வழக்கு சொத்திற்கும் என்ன தொடர்பு என்பது குறித்தும் எவ்வித சரத்துக்களும், சங்கதிகளும் மனுவில் இடம்பெறவில்லை என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

5.3). அசல் வழக்கானது 1ம் வாதியால், 1ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு 2ம் அயிட்ட சொத்து வாதியுடையது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் 2ம் அயிட்ட பகுதியில் உள்ள வாதியின் சுவற்றை பராமரிக்க பிரதிவாதிகளோ, அவரைச் சார்ந்தவர்களோ அவரது நன்பர்களோ, அவரது உறவினர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.4). இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டவாறு வழக்கு 2ம் அயிட்ட சொத்து 1ம் வாதிக்கு சொந்தமானதா? என்பதை தீர்மானிக்க வேண்டியது அவசியமாகும். மனுதாரர்கள் தரப்பில் 12.06.2000 தேதியிட்ட 1ம் பிரதிவாதியும் அவரது தாய் மற்றும் சகோதரரும் செய்து கொண்ட பாகசாசன பத்திரத்தின் சான்றிட்ட நகல்

தாக்கல் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு அவசியமானதாகவும், அது தாவா சொத்து பொறுத்து பிரச்சினையை தீர்மானிக்கவும், அசல் வழக்கில் இறுதி முடிவை எட்ட அவசியமான ஆவணங்களாகும்.

**முடிவாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**மனுதாரர்கயள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/ Fair Order
I.A.No.11/2026 in
O.S.No.192/2017
Dated : 27.01.2026
DMC, Sulur